**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,** சங்கரன்கோவில்,

**முன்னிலை : திருமதி.M.அலிமா, B.A.,L.L.M.,**
முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**E.A.No.06/2025, E.A.No.07/2025 and E.A.No.08/2025**

**in**

**E.A.08/2013**

**in**

**E.P.20/2012**

**in**

**O.S.06/2011**

சின்னத்துரை ....மனுதாரர்/தகதாமனுதாரர்/
ஆட்சேபணைதாரர்

/எதிர்/

1. ரத்தினம் ....எதிர்மனுதார்/1ம் எதிர்மனுதாரர்/
மனுதாரர்/வாதி

2. அழகையா (இறப்பு)

3. லட்சுமியம்மாள் (இறப்பு)

(ஷை 2, 3 எதிர்மனுதாரர்கள் அவர்களின்
பவர் ஏஜெண்டான சுரேஷ் என்பவர் மூலம் என்பதை
ஷை சுரேஷ் என்பவர் 2, 3 எதிர்மனுதாரர்களின்
பவர் ஏஜெண்ட் என்பதை தகதாமனுதாரர்
ஒப்புக்கொள்ளவில்லை) ....எதிர்மனுதாரர்கள்/
2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனுக்களானது 06.08.2025 தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன்பாக இறுதியான விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.ஆனந்த் அவர்கள் ஆஜராகியும், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.சுந்தரேசன் அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் காலம்சென்றுவிட்ட நிலையிலும், மனுக்கள், எதிருரைகள் மற்றும் நிறைவேற்றுதல் மனு கோப்பு அசல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:27:45 +0530

வழக்கு கோப்பு ஆகியவைகளை பரிசீலனை செய்தும், இருதரப்பு வாத உரையை கேட்டறிந்தும், இதுநாள் வரையில் இந்நீதிமன்ற பரிசீலனையின் கீழ் இருந்து வந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்,

**பொதுவான உத்தரவு**

மனுதாரரால் இம்மனுக்களானது உரிமையியல் நடைமுறைச் சட்டம் பிரிவு 151, கட்டளை 18 விதி 17 மற்றும் கட்டளை 7 விதி 14(3) ஆகியவற்றின் கீழ் E.A.No.08/2013 மனுவினை மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்யவதற்காக மறுதிறவு செய்து, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை குறியீடு செய்ய ம.சா.1 –ஐ மீண்டும் அழைக்கக் கோரியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

**1) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.06/2025, E.A.No.07/2025 and E.A.No.08/2025 மனுக்களின் சுருக்கம்:–**

மனுதாரர் நிறைவேற்றுதல் மனுவில் ஆட்சேபணைதாரர் என்றும், மனு தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்ள உரிமையில்லையென ஆட்சேபணை செய்து மேற்படி E.A.No.08/2013 மனுவை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி E.A.No.08/2013 மனுவில் தனது தரப்பு வாதுரைக்காக வாய்தா ஏற்பட்டுள்ளது என்றும், இந்த E.A.No.08/2013 மனுவில் தன்னை விசாரிக்கும்போது நிறைவேறுதல் மனுவின் அசல் வழக்கான அ.வ.எண்.6/2011ன் தீர்ப்புரை, 1ம் எதிர்மனுதாரர் சுரேஷுடன் செய்த 12.09.2010ம் தேதிய கிரைய ஒப்பந்தத்தின் சான்றிட்ட நகல், 1ம் எதிர்மனுதாரர் நீதிமன்றம் மூலம் பெற்ற கிரைய ஆவணம், அ.வ.எண்.290/2012ன் தீர்ப்புரை ஆகியவற்றை கைத்தவறுதலாக வைத்துவிட்டதால் தாக்கல் செய்யவில்லை என்றும், அந்த ஆவணங்களை தனது தரப்பில் குறியிட்டால் மட்டுமே தனது தரப்பினை நிரூபிக்க முடியும் என்றும், தன்னை விசாரித்தபோது தாக்கல் செய்ய முடியாமல் போனது வேண்டுமென்று ஏற்பட்டதல்ல என்றும், அது தெய்வாதீனமானது என்றும், தனக்கு நல்ல கட்சியிருப்பதாக மூத்த வழக்கறிஞரின் சட்ட ஆலோசனை

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.29

கிடைத்துள்ளது என்றும், தனது தரப்பில் மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் E.A.No.08/2013 மனுவில் சில ஆவணங்களை குறியீடு செய்ய வேண்டியது அவசியமாயுள்ளது என்றும், அவ்வாறு ஆவணங்களை குறியீடு செய்தால் மட்டுமே தனது தரப்பினை இந்நீதிமன்றத்திற்கு தெளிவுபடுத்த இயலும் என்றும், எனவே, E.A.No.08/2013 மனுவினை மனுதாரர் தரப்பில் கூடுதல் ஆவணங்களை குறியீடு செய்யவதற்காக மறுதிறவு செய்து, மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தை குறியீடு செய்ய ம.சா.1 –ஐ மீண்டும் அழைக்கக் கோரியும், மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள கூடுதல் ஆவணங்களை ஏற்றுக் கொள்ளக் கோரியும் உத்தரவிடக்கோரி இம்மனுக்கள் மனுதாரர் தரப்பில் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட E.A.No.06/2025, E.A.No.07/2025 and E.A.No.08/2025 –ன் எதிருரைகளின் சுருக்கம்:–</u>**

மனுதாரரின் மனுக்கள் சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல என்றும், தபசில் கண்ட சொத்தை பொறுத்து 1ம் எதிர்மனுதாரருக்கு 2, 3 எதிர்மனுதாரர்கள் பொது அதிகார முகவர் என்ற நிலையில் சுரேஷ் என்பவருக்கு பொது அதிகார ஆவணம் பிறப்பித்துக் கொடுத்து, பொது அதிகார ஆவணத்தின் முறையில் மேற்படி சுரேஷ் என்பவர் 1ம் எதிர்மனுதாரருக்கு 12.09.2010 தேதிய கிரைய ஒப்பந்த ஆவணத்தின்படி குறிப்பிட்ட காலத்திற்குள் 2, 3 எதிர்மனுதார்களின் பவர் ஏஜெண்ட் சுரேஷ் என்பவர் கிரையம் முடிக்க முன் வராததால், தபசில் கண்ட சொத்தை பொறுத்து சங்கரன்கோவில் முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் கிரையம் முடித்துப் போக வேண்டி பவர் ஏஜெண்ட் சுரேஷ் என்பவர் மீது அ.வ.எண்.6/2011 என்ற வழக்கை தாக்கல் செய்து, கிரைய பாக்கி தொகையினை பவர் ஏஜெண்ட் சுரேஷ் என்பவர் பெற்றுக்கொண்டு இந்நீதிமன்றம் குறிப்பிடும் ஒரு தினத்திற்குள் இந்த மனுவில் கண்ட 1ம் எதிர்மனுதாரருக்கு கிரைய பத்திரம் எழுதி கிரைய பத்திரத்தினை பதிவு செய்து, தபசில் கண்ட சொத்தையும், வேறு சொத்துக்களையும் 1ம் எதிர்மனுதாரர் வசம் சுவாதீனம் ஒப்படைத்து போகும்படியும், தவறும்பட்சத்தில் நீதிமன்றம் மூலம் கிரைய ஆவணம்

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:00 +0530

எழுதப்பெற்று சுவாதீனம் பெறும் வகையில் வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும், மேற்படி மனுவில் 1ம் எதிர்மனுதாரர் கோரியவாறு இந்நீதிமன்றமும் தீர்ப்பும், தீர்ப்பாணையும் பிறப்பிக்கப்பட்டிருந்தது என்றும், அதனடிப்படையில் 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றத்தின் மூலம் மேற்படி தபசில் சொத்துக்களை 1ம் எதிர்மனுதாரர் வசம் நிறைவேற்றும் பொருட்டு இந்நீதிமன்றத்தில் நிறைவேறுதல் மனு தாக்கல் செய்து, அதனடிப்படையில் இ.பி.எண்.35/2011 தாக்கல் செய்ததின் அடிப்படையில் இந்நீதிமன்றம் 2, 3 எதிர்மனுதாரர்கள் ஆஜராகாத காரணத்தினால் 18.01.2012 தேதியில் கிரைய ஆவணம் பிறப்பித்துக் கொடுத்து 1ம் எதிர்மனுதாரர் வசம் சுவாதீனம் ஒப்படைக்க இ.பி.எண்.20/2012 தாக்கல் செய்த நிலையில் இந்த வழக்கின் மனுதாரர் வேண்டுமென்றே பொய்யான மனுவை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்து, இந்த 1ம் எதிர்மனுதாரரை அழைக்கழிக்க வேண்டுமென்ற கெட்ட எண்ணத்தில் இந்த மனுவை தாக்கல் செய்து, பல வாய்தாக்கள் வாங்கிய பின்பு வேண்டுமென்றே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார் என்றும், அதனால் இந்த வழக்கை ம.சா.1 ரீ–ஓபன் செய்யக் கோரும் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், மேலும் இம்மனுவில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் பெற்ற தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டப்படியானது என்றும், அதற்கு மாறுபட்டு இம்மனுவில் கண்ட மனுதாரர் கட்சி கோருவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 1 முதல் 3 வரையான ஆவணங்கள் இந்த அசல் வழக்கிலும், அதனை தொடர்ந்த நிறைவேறுதல் நடவடிக்கையிலும் பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் இந்த நிறைவேறுதல் நடவடிக்கையில் கோப்புகளாக ஏற்கனவே உள்ளன என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் சட்டப்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவேண்டிய அவசியமற்ற ஆவணங்கள் என்றும், மனுதாரர் தரப்பில் 4 வது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு குறித்து மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள E.A.No.08/2013 மனுவில் பிரஸ்தாபிக்கப்படாத வழக்காகும் என்றும், மனுதாரர் தரப்பில் வாதுரையில் பிரஸ்தாபிக்கப்படாத வழக்கையும், அது குறித்த

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:06 +0530

ஆவணத்தையும் சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், மேலும் மனுதாரர் பிரஸ்தாபிக்கும் மேற்படி தீர்ப்பும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள E.A.No.08/2013 மனுவின் தீர்முடிவிற்கு முற்றிலும் அவசியமற்ற ஆவணமாகும் என்றும், மனுதாரர் இம்மனு நடவடிக்கைகளை காலம் கடத்தி இந்த எதிர்மனுதாரரை தீர்ப்பின் பலனை அடையவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்துடன் இந்நீதிமன்றத்தின் பொன்னான காலத்தை வீணடிக்கும் நோக்கத்துடன் மனுதாரர் தரப்பில் ரீ–ஓபன் மற்றும் ரீ–கால் மற்றும் ஆவணங்களை ஏற்றுக்கொள்ளவும் மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், எனவே இம்மனுக்களானது தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று எதிருரைகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

3) **<u>தீர்வுக்குரிய பிரச்சனை:-</u>**

இம்மனுக்களானது அனுமதிக்கப்படத்தக்கதா? என்பதேயாகும்.

4) மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட மனுக்கள், 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிருரைகள், வழக்கு கோப்பு மற்றும் இருதரப்பு வாதஉரை ஆகியவைகள் பரிசீலனை செய்யப்பட்டன.

5) E.A.No.08/2013 மனுவானது தகதா மனுவின் தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்ள உரிமையில்லை என்று தீர்மானித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

6) E.A.No.08/2013 மனுவானது மனுதாரர் தரப்பு வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டுள்ள நிலையில், மனுதாரரால் இம்மனுக்கள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

7) மனுதாரரால் E.A.No.08/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் காலதாமதமாக தற்பொழுது E.A.No.08/2013 மனு வாத உரைக்காக ஒத்திவைக்கப்பட்டிருந்த நிலையில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதை இந்நீதிமன்றத்தால் அறியமுடிகிறது. மேற்படி

ALIMA M
Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:14 +0530

ஆவணங்களை E.A.No.08/2013 மனுவின் விசாரணையின்போது தாக்கல் செய்யாததற்கு எவ்வித விளக்கமும் மனுதாரர் தரப்பில் இம்மனுவில் தெரிவிக்கப்படவில்லை.

8) மேலும், இம்மனுக்களின் 1ம் எதிர்மனுதாரர் தரப்பில் E.A.No.08/2013–ஐ ரீ–ஓபன் செய்யக் கோரும் மனு சட்டப்படி நிலைநிற்கத்தக்கதில்லை என்றும், மேலும் இம்மனுவில் கண்ட 1ம் எதிர்மனுதாரர் பெற்ற தீர்ப்பும், தீர்ப்பாணையும் சட்டப்படியானது என்றும், அதற்கு மாறுபட்டு இம்மனுவில் கண்ட மனுதாரர் கட்சி கோருவது சட்டப்படி ஏற்றுக்கொள்ளக்கூடியதில்லை என்றும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள ஆவணங்களில் 1 முதல் 3 வரையான ஆவணங்கள் இந்த அசல் வழக்கிலும், அதனை தொடர்ந்த நிறைவேறுதல் நடவடிக்கையிலும் பிறப்பிக்கப்பட்ட ஆவணங்களாகும் என்றும், மேற்படி ஆவணங்கள் அனைத்தும் இந்த நிறைவேறுதல் நடவடிக்கையில் கோப்புகளாக ஏற்கனவே உள்ளன என்றும், எனவே மேற்படி ஆவணங்கள் சட்டப்படி மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்படவேண்டிய அவசியமற்ற ஆவணங்கள் என்றும், மனுதாரர் தரப்பில் 4 வது ஆவணமாக குறிப்பிடப்பட்டுள்ள வழக்கு குறித்து மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள E.A.No.08/2013 மனுவில் பிரஸ்தாபிக்கப்படாத வழக்காகும் என்றும், மனுதாரர் தரப்பில் வாதுரையில் பிரஸ்தாபிக்கப்படாத வழக்கையும், அது குறித்த ஆவணத்தையும் சட்டப்படி ஏற்றுக்கொள்ள இயலாது என்றும், மேலும் மனுதாரர் பிரஸ்தாபிக்கும் மேற்படி தீர்ப்பும், மனுதாரர் தாக்கல் செய்துள்ள E.A.No.08/2013 மனுவின் தீர்முடிவிற்கு முற்றிலும் அவசியமற்ற ஆவணமாகும் என்றும், மனுதாரர் இம்மனு நடவடிக்கைகளை காலம் கடத்தி இந்த எதிர்மனுதாரரை தீர்ப்பின் பலனை அடையவிடக்கூடாது என்ற கெட்ட எண்ணத்துடன் இந்நீதிமன்றத்தின் பொன்னான காலத்தை வீணடிக்கும் நோக்கத்துடன் மனுதாரர்களால் தாக்கல்

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:22 +0530

செய்யப்பட்டுள்ளன என இம்மனுக்களுக்கு ஆட்சேபணை தெரிவிக்கப்பட்டுள்ளது.

9) இருப்பினும், E.A.No.08/2013 மனுவானது மனுவின் தபசில் சொத்தை 1ம் எதிர்மனுதாரர் இந்நீதிமன்றம் மூலம் வாழ்விப்பு சுவாதீனம் பெற்றுக்கொள்ள உரிமையில்லை என்று தீர்மானித்து உத்தரவிடக்கோரி இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருப்பதால் மனுதாரரால் E.A.No.08/2025 உடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் E.A.No.08/2013 மனுவின் சிறந்த நீதிமுறை தீர்மானிப்பிற்கு அவசியமானது என இந்நீதிமன்றம் கருதுகிறது.

10) ஆகையால், E.A.No.08/2013 மனுவானது மறுதிறவு செய்யப்பட்டு, ம.சா.1–ஐ திரும்ப அழைக்க அனுமதித்து, மனுதாரர் தரப்பில் E.A.No.08/2025 மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்களானது நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்குட்பட்டு இந்நீதிமன்றத்தால் ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

11) எனவே, மேற்கண்ட பரிசீலனையிலிருந்து இம்மனுக்களானது நீதியின் நலன் கருதி நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படத்தக்கது என்று இம்மனுக்களுக்கு இந்நீதிமன்றத்தால் முடிவு காணப்படுகிறது.

**12) இறுதியாக**

**E.A.No.06/2025**

இம்மனுவானது ரூ.500/– (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 08.09.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 08.09.2025.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:28 +0530

**E.A.No.07/2025**

இம்மனுவானது ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 08.09.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 08.09.2025.

**E.A.No.08/2025**

இம்மனுவானது இம்மனுவுடன் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணத்தின் நிரூபணம் மற்றும் தொடர்புடைமைக்கு (Subject to Proof and Relevancy) ரூ.500/- (ரூபாய் ஐநூறு மட்டும்) நிபந்தனை செலவுத்தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. மனுதாரர் மேற்படி தொகையினை 1ம் எதிர்மனுதாரருக்கு நேரடியாக 08.09.2025ம் தேதிக்குள் செலுத்த வேண்டுமெனவும், தவறும் பட்சத்தில் இம்மனுவானது தள்ளுபடி செய்யப்படும் என்றும் உத்தரவிடப்படுகிறது. மீண்டும் அழைக்க 08.09.2025.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2025 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29ம் நாள் இந்நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:36 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்கரன்கோவில்.

**இருதரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள் :-**

**- இல்லை -**

ALIMA M

Digitally signed by ALIMA M
Date: 2025.08.29 18:28:46 +0530

**முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சங்கரன்கோவில்.**

முு.மா.உ. நீதிமன்றம்,
சங்கரன்கோவில்,

E.A.No.06/2025,
E.A.No.07/2025 and
E.A.No.08/2025
in
E.A.08/2013
in
E.P.20/2012
in
O.S.06/2011

உத்தரவு (Draft / Fair)

நாள் : 29.08.2025